©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R.Dis. No. 197/2009
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 35] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 5, 2012
Aavani 20, Thiruvalluvar Aandu–2043

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| **வருவாய்த் துறை** | |
| ஆட்சி எல்லை-திருப்பூர் மாவட்டம் தற்போதைய உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் உள்வட்டங்களை சீரமைத்து புதிய மடத்துக்குளம் வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது. .. .. .. | 48–52 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

### வருவாய்த் துறை

*தலைமைச் செயலகம், 2012 செப்டம்பர் 5.*

**[ஆட்சி எல்லை-திருப்பூர் மாவட்டம் தற்போதைய உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் உள்வட்டங்களை சீரமைத்து புதிய மடத்துக்குளம் வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது.]**

No. II(1)/REV/19/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 290, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 16 ஆகஸ்ட் 2012.]*

**படிக்கவும்:**

(1) அரசாணை (நிலை) எண் 499, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, நாள்: 24–12–2009.

(2) மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் கடித எண் 8651/2011/ஆ1, நாள்: 14–06–2011.

(3) மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் கடித எண் 8651/2011/ஆ3, நாள்: 6–09–2011.

(4) மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் கடித எண் 8651/2011/ஆ1, நாள்: 9–09–2011 மற்றும் 12–9–2011.

(5) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண் ந.க.பணி 6(4)/35184/2011, நாள்: 3–10–2011.

**ஆணை: [அரசாணை (நிலை) எண் 290, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 16 ஆகஸ்ட் 2012.]**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை கோட்டத்திலுள்ள மடத்துக்குளம் வட்டம், தற்போது மடத்துக்குளம், குடிமங்கலம் மற்றும் பெதப்பம்பட்டி ஆகிய மூன்று குறுவட்டங்களை உள்ளடக்கி அதன் தலைமையிடத்தை உடுமலைப்பேட்டை நகரில் இயங்கிட பார்வை (1) இல் கண்ட அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

2. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் அடிப்படையில் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*(i)* தற்போது இயங்கிவரும் மடத்துக்குளம், பெதப்பம்பட்டி மற்றும் குடிமங்கலம உள்வட்டங்களைச் சார்ந்த மடத்துக்குளம் வட்டத்தின் தலைமையிடத்தை உடுமலைப்பேட்டை நகரிலிருந்து மடத்துக்குளத்திற்கு மாற்றினால் தற்போது பெதப்பம்பட்டி மற்றும் குடிமங்கலம் உள்வட்டத்தில் வசிக்கும் பொதுமக்கள் சுமார் 20 கி.மீ. வரை உடுமலைப்பேட்டை நகருக்கு வந்து பின் 15 கி.மீ. தூரம் மடத்துக்குளத்திற்கு செல்லவேண்டும். நிர்வாக நலன் கருதியும் குடிமங்கலம் மற்றும் பெதப்பம்பட்டி உள்வட்டங்களை தற்போது இயங்கிவரும் உடுமலைப்பேட்டை வட்டத்தில் சேர்த்தும், மடத்துக்குளம் உள்வட்டத்தினை மட்டும் மடத்துக்குளம் தனிவட்டமாக மாற்றி அமைக்கலாம். மேலும், மடத்துக்குளம் உள்வட்டத்திலுள்ள 8 கிராமங்களை பிரித்து தூங்காவி என்ற உள்வட்டத்தை உருவாக்கலாம் எனவும் மடத்துக்குளம் உள்வட்டம் தொகுதி சீரமைப்பிற்கு முன்பு உடுமலைப்பேட்டை தொகுதியில் இருந்தது. தொகுதி சீரமைப்பிற்கு பின்பு மடத்துக்குளம் உள்வட்டம் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதியில் வருவதால் மடத்துக்குளம் என்ற பெயரில் அதன் தலைமையிடத்தை மடத்துக்குளத்திற்கு மாற்றியமைக்கலாம்.

*(ii)* உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் வட்டங்களை சீரமைப்பது தொடர்பான ஆட்சி எல்லை கீழ்வருமாறு:

| *வ.எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *வட்டம் தற்போது உள்ளபடி* | *கோரிக்கையின்படி மறு சீரமைப்பிற்கு பின்* மடத்துக்குளம் வட்டம் | *கோரிக்கையின்படி மறு சீரமைப்பிற்கு பின்* உடுமலைப்பேட்டை வட்டம் | *அரசாணை எண் 279 வரு. நாள் 9–6–06ன்படி* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1. | தலைமையிடம் | மடத்துக்குளம் உள்வட்டங்கள்<br>1. மடத்துக்குளம்<br>2. குடிமங்கலம்<br>3. பெதப்பம்பட்டி | மடத்துக்குளம் | உடுமலைப்பேட்டை உள்வட்டங்கள்<br>1. குடிமங்கலம்<br>2. பெதப்பம்பட்டி | |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ.) | 536.64 | 226.96 | உடுமலைப்பேட்டை வட்டம் 896.69 ச.கி.மீ.<br>பெதப்பம்பட்டி உள்வட்டம் 156.93 ச.கி.மீ.<br>குடிமங்கலம் உள்வட்டம் 152.78 ச.கி.மீ.<br>மொத்தம் 1206.40 ச.கி.மீ. | குறைந்த அளவு 250 ச.கி.மீ. முதல் அதிக அளவு 2000 ச.கி.மீ. வரை. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 3. | மக்கள் தொகை | 1,78,781 | 1,02,462 | உடுமலைப்பேட்டை 2,82,495<br>பெதப்பம்பட்டி 39,866<br>குடிமங்கலம் 36,453<br>மொத்தம் 3,58,814 | குறைந்த அளவு 1,00,000 முதல் அதிக அளவு 5,50,000வரை. |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | மடத்துக்குளம் | மடத்துக்குளம் | உடுமலைப்பேட்டை | |
| 5. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 42 | 18 | 75 | குறைந்த அளவு 30 கிராமங்கள். |
| 6. | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 03<br>1. மடத்துக்குளம் 18<br>2. குடிமங்கலம் 13<br>3. பெதப்பம்பட்டி 11<br>42 | 02<br>1. மடத்துக்குளம் 10<br>2. துங்காவி 8<br>18 | 1. உடுமலைப்பேட்டை 15<br>2. குறிச்சிக்கோட்டை 16<br>3. பெரியவாளவாடி 20<br>4. பெதப்பம்பட்டி 13<br>5. குடிமங்கலம் 11<br>75 | – |
| 7. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 125 உடுமலைப்பேட்டை<br>126 மடத்துக்குளம் | 126 மடத்துக்குளம் | 125 உடுமலைப்பேட்டை<br>126 மடத்துக்குளம் | – |
| 8. | பாராளுமன்றத் தொகுதியின் பொயர் | பொள்ளாச்சி | •பொள்ளாச்சி | பொள்ளாச்சி | – |
| 9. | நகராட்சிகளின் எண்ணிக்கை பெயருடன் | இல்லை | இல்லை | உடுமலைப்பேட்டை 1 | – |
| 10. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 02<br>1. குடிமங்கலம்<br>2. மடத்துக்குளம் | 1. மடத்துக்குளம் | 1. உடுமலைப்பேட்டை<br>2. குடிமங்கலம் | 2 அல்லது 3 முழு ஊராட்சி ஒன்றியங்கள். |
| 11. | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | 04<br>1. மடத்துக்குளம்<br>2. கணியூர்<br>3. கொமரலிங்கம்<br>4. சங்கரராமநல்லூர் | 04<br>1. மடத்துக்குளம்<br>2. கணியூர்<br>3. கொமரலிங்கம்<br>4. சங்கரராமநல்லூர் | 01<br>தளி | – |
| 12. | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 34 | 11 | உடுமலைப்பேட்டை 38<br>மடத்துக்குளம் வட்டத்திலிருந்து பிரியும் உள்வட்டங்களுக்கான கிராம பஞ்சாய்த்துக்கள் 23<br>61 | – |

*(iii)* மேற்குறிப்பிட்ட விவரங்களின்படி அரசாணை (நிலை) எண் 279, வருவாய், நாள் 9–06–2003ல் உள்ள அளவுகோல்களின்படி, பரப்பளவு மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கையை உத்தேசிக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டம் நிறைவு செய்யவில்லை எனினும், அரசு நலத் திட்டங்கள் மக்களை செவ்வனே சென்றடைய மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டங்களை சீரமைத்து மடத்துக்குளம் வட்டத்திலுள்ள குடிமங்கலம், பெதப்பம்பட்டி உள்வட்டங்களை உடுமலைப்பேட்டை வட்டத்தில் சேர்த்தும், மடத்துக்குளம் உள்வட்டத்திலுள்ள 8 கிராமங்களை பிரித்து துங்காவி என்ற உள்வட்டத்தை உருவாக்கி, மடத்துக்குளம், துங்காவி என்ற இரு உள்வட்டங்கள் அடங்கிய மடத்துக்குளம் வட்டத்தை சீரமைக்குமாறும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

*(iv)* சீரமைக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்திற்கான பணியிட விவரங்களை முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | மடத்துக்குளம் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | உடுமலைப்பேட்டை வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள் | மடத்துக்குளம் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கக் வேண்டிய பணியிடங்கள் | மடத்துக்குளம் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | 5+7 |
| **அ.** | **பொதுப்பிரிவு:—** | | | | | | |
| 1. | வட்டாட்சியர் | நி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 3. | மண்டல துணை வட்டாட்சியர் | த | 1 | 1 | 0 | 0 | 1 |
| 4. | வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 3 | 1 | 2 | 1 | 2 |
| 5. | உதவியாளர் | நி | 5 | 3 | 2 | 0 | 3 |
| 6. | இளநிலை உதவியாளர் | நி | 4 | 3 | 1 | 0 | 3 |
| 7. | தட்டச்சர் | நி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 8. | பதிவுறு எழுத்தர் | நி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 9. | ஓட்டுநர் | த | 1 | 1 | 0 | 0 | 1 |
| 10. | அலுவலக உதவியாளர் | நி | 6 | 4 | 2 | 0 | 4 |
| 11. | இரவு காவலர் | நி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 12. | மசால்சி | நி | 1 | 1 | 0 | 0 | 1 |
| | **மொத்தம்** | | **26** | **19** | **7** | **1** | **20** |
| **ஆ.** | **சமூக பாதுகாப்புத்திட்டம்** | | | | | | |
| 1. | தனிவட்டாட்சியர் | த | 1 | 1 | 0 | 0 | 1 |
| | **மொத்தம்** | | **1** | **1** | **0** | **0** | **1** |
| **இ.** | **தேர்தல் பிரிவு** | | | | | | |
| 1. | துணை வட்டாட்சியர் | த | 1 | 1 | – | – | 1 |
| 2. | உதவியாளர் | த | 1 | 1 | – | – | 1 |
| | **மொத்தம்** | | **2** | **2** | **–** | **–** | **2** |
| **ஈ.** | **வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | |
| 1. | வட்ட வழங்கல் அலுவலர் | த | 1 | 1 | – | – | 1 |
| 2. | தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | த | 1 | 1 | – | – | 1 |
| | **மொத்தம்:** | | **2** | **2** | **–** | **–** | **2** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ) மொத்தம்** | | **31** | **24** | **7** | **1** | **25** |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | மடத்துக்குளம் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | உடுமலைப்பேட்டை வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள் | மடத்துக்குளம் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கக் வேண்டிய பணியிடங்கள் | மடத்துக்குளம் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | 5+7 |
| **உ.** | **நில அளவைப் பிரிவு** | | | | | | |
| 1. | வட்ட துணை ஆய்வாளர் | நி | 1 | 1 | – | – | 1 |
| 2. | வட்ட சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | – | – | 1 |
| 3. | முதுநிலை வரைவாளர் | நி | 1 | 1 | – | – | 1 |
| 4. | வட்ட வரைவாளர் | நி | 1 | 1 | – | – | 1 |
| 5. | உள்வட்ட அளவர் | நி | 3 | 1 | 2 | 1 | 2 |
| 6. | புல உதவியாளர் | நி | 1 | 1 | – | – | 1 |
| | **மொத்தம்** | | **8** | **6** | **2** | **1** | **7** |
| **ஊ.** | **கிராம நிர்வாக அலுவலர்கள்** | | | | | | |
| 1. | கிராம நிர்வாக அலுவலர் | நி | 44 | 21 | 23 | – | 21 |
| **எ.** | **கிராம உதவியாளர்கள்** | | | | | | |
| 1. | கிராம உதவியாளர் | நி | 45 | 21 | 24 | – | 21 |

(*v*) அரசாணை (நிலை) எண் **499**, வருவாய் வ.நி.1(1)த் துறை, நாள் **24–12–2009**ன்படி மடத்துக்குளம் வட்டம் உருவாக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் தற்போது சீரமைப்பிற்குப்பின் ஒரு உள்வட்டம் உருவாக்க திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கோரியுள்ளபடியால் **1** வருவாய் ஆய்வாளர் பணியிடமும் **1** உள்வட்ட அளவர் பணியிடமும் புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டும். மேற்படி அரசாணையின்படி உருவாக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்திற்கு சமூக பாதுகாப்புத் திட்டம் பிரிவில் தனி வட்டாட்சியர் பணியிடம் **1** மட்டும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போது சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் அரசின் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த வேண்டியுள்ளதாலும், அத்திட்டங்கள் அரசு நிர்ணயித்த காலத்தில் பொதுமக்களுக்கு சென்றடைதல் வேண்டும் என்பது அத்தியவசியமாகிறது. எனவே, சீரமைக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கு **1** உதவியாளர் மற்றும் **1** பதிவறை எழுத்தர் பணியிடங்கள் புதியதாக தோற்றுவிப்பது அவசியமாகிறது. எனவே, சீரமைக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் கீழ்க்கண்ட பணியிடங்கள் ஒப்பளிக்குமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கீழ்க்கண்டவாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| (*i*) | வருவாய் ஆய்வாளர் | 1 |
| (*ii*) | உள்வட்ட அளவர் | 1 |
| (*iii*) | உதவியாளர் | 1 |
| (*iv*) | பதிவறை எழுத்தர் | 1 |

**3.** திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோரின் அறிக்கைகளை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(*i*) திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டத்திலுள்ள குடிமங்கலம், பெதப்பம்பட்டி உள்வட்டங்களை உடுமலைப்பேட்டை வட்டத்தில் சேர்த்தும் மடத்துக்குளம் உள்வட்டத்திலுள்ள **8** கிராமங்களை பிரித்து துங்காவி என்ற உள்வட்டத்தை உருவாக்கி மடத்துக்குளம், துங்காவி என்ற இரு உள்வட்டங்கள் அடங்கிய சீரமைக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டம் உருவாக்குவதற்கும், அவ்வாறு சீரமைக்கப்பட்ட புதிய மடத்துக்குளம் வட்டம் உருவாக்கப்படும்போது வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் பரப்பளவு ஆகியவை அரசாணை (நிலை) எண் **279**, வருவாய் நாள் **9–06–2003**ன்படி பூர்த்தி செய்யாவிடினும் அவ்வாணையின் நிபந்தனைகளைத் தளர்த்தி மடத்துக்குளத்தினை தலைமையிடமாகக் கொண்டு இணைப்பு**–1** இல் கண்டுள்ளவாறு புதிய வட்டம் உருவாக்கப்படுகிறது.

(*ii*) மேற்படி புதிய சீரமைக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்திலிருந்து உடுமலைப்பேட்டை வட்டத்திற்கு **9** பணியிடங்களை (பொதுப்பிரிவில் **7** பணியிடங்கள் + நில அளவைப் பிரிவில் **2** பணியிடங்கள்) பணி பரவலமர்த்தல் செய்தும், புதிய மடத்துக்குளத்தில் உருவாக்கப்படும் புதிய உள்வட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு **4** புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

| வ. எண் | பணியிடங்கள் | அடிப்படை ஊதியம் + தர ஊதியம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | ரூ. 5200–20200+த.ஊ. 2800 | 1 |
| 2. | உள்வட்ட அளவர் | ரூ. 5200–20200+த.ஊ. 2400 | 1 |
| 3. | உதவியாளர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ரூ. 5200–20200+த.ஊ. 2800 | 1 |
| 4. | பதிவறை எழுத்தர் | ரூ. 4800–10000+த.ஊ. 1400 | 1 |

4. மேலே பத்தி 3(ii) இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**01 01 பணியாளர் சம்பளங்கள்**

2053 00 மாவட்ட நிருவாக – 094 ஏனைய பணியாளரமைப்பு–I திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

5. இச்செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2012–2013 திருத்திய மதிப்பீடு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அவ்வாறு மேற்கொள்ளப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், 2012–2013 திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான செயற்குறிப்பினை நிதித்துறைக்கு அனுப்பும்போது, இச்செலவினத்தையும் சேர்த்து தவறாமல், அனுப்புமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவலகம் சார்பற்ற எண் 46726/CMPC/2012, நாள் 14–08–2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 899 (எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது) இல் பெற்று இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இணைப்பு–1**

*[அரசாணை (நிலை) எண் 290, வருவாய், நாள் 16—08—2012]*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திருப்பூர் மாவட்டத்தில் தற்போதைய உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் வட்டங்களைச் சீரமைத்து மடத்துக்குளம் மற்றும் தூங்காவி உள்வட்டங்களை உள்ளடக்கி மடத்துக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மடத்துக்குளம் வட்டம் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கல் 1ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

புதிதாக உருவாக்கப்படும் மடத்துக்குளம் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது உடுமலைப்பேட்டை வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி மடத்துக்குளம் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

***அட்டவணை***

| வ.எண் | வட்டத்தின் பெயர் | உள்வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | மடத்துக்குளம் | 1. மடத்துக்குளம்<br>2. தூங்காவி |

**கு. ஞானதேசிகன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU